# ஆத்ம ஜோதி



ஸ்ரீ சாரதா தேவியார்

ஓம்



# ஆத்ம ஜோதீ

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே– சுத்தானந்தர்

சோதி 6 | விஜய வஸ்ரு மார்கழி மாசம் திகதி 1 | சுடர் 2

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஸ்ரீராமகிருஷ்ணர் | ... | 29 |
| இருவரும் ...... துதித்த விதம் | ... | 30 |
| ஸ்ரீசாரதாதேவியாரின் ... விழா | ... | 31 |
| சாரதாமணி | ... | 37 |
| ஸ்ரீசாரதாதேவி அர்ச்சனைமாலை | ... | 38 |
| சிகித்வஜனும்-சூடாலையும் | ... | 40 |
| எழு திருப்பள்ளியெழுச்சி | ... | 43 |
| சிவசத்தி பராசக்தியாகுந் தன்மை | ... | 45 |
| ரமணசங்க மணிகளுக்கு ஓர் விண்ணப்பம் | | 48 |
| என் ஐயனை யான் கண்டவாறு | ... | 51 |
| நச்சிகேதனின்...வரங்களும் | ... | 53 |
| சன்மார்க்க வாசிகசாலை செய்தித்திரட்டு | — | 56 |



### ஆத்ம ஜோதி

✻ ஆயுள் சந்தா ரூபா 75/- ✻ வருட சந்தா ரூபா 3/

ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்.- க. இராமச்சந்திரன்
60 டில் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி.


## ஸ்ரீ ராமகிருஷ்ணர்

பார்தனிலே வேதாந்தப் பயிர்வ ளர்த்தோன்
பத்தினியைச் சோதரியென் றெண்ணி வாழ்ந்தோன்
கூர்மதியால் எக்கலையும் தானே கற்றோன்
குணக்குன்றும் ராமகிருஷ்ண பரமஹம்ஸன்
சீர்மிகுந்த மெய்ஞ்ஞானி தெரிந்துரைத்த
செம்மொழிகள் சிந்தையினில் சேர்ந்தோ ரென்றும்
பேர்பெருக நீடிந்த உலகில் வாழ்ந்து
பேரின்ப வாழ்வினையும் பெறுவர் மாதோ!

-- கவிமணிதே. வி

## ஸ்ரீ சாரதா தேவியார்

பாரதத்தின் வேதாந்தப் பதியில் வந்து
பாரெல்லாம் ஒளிவீசும் பரம ஹம்ஸர்
தாரமதாய் வைத்துகந்த தைய லாளைத்
தாரணிக்கோர் தனியணங்காய்த் தோன்றி னாளை
நாரதர்போல் பக்திநெறி நல்கி னாளை
நரேந்திரனுக் கருள்சுரந்த நங்கை தன்னைச்
சாரதையாந் திருநாமம் படைத்து ளாளைச்
சரண்புகுவார் சாந்திநிலை யடைவர்தாமே!

க இ

## ஸ்ரீ விவேகாநந்தர்

சிந்திக்கத் தீரஞ் செறிக்கும் மனத்தவிசில்
வந்திக்க ஞான மகிழ்பெருக்கும் —— பந்திக்கும்
பேதமலந் தேய்க்கும் பெருமைவிவே காநந்தர்
பாதமலர் யாமுடைய பற்று.

அ. ஸ்ரீ

## இருவரும் ஒருவரை ஒருவர்
# துதித்த விதம்.

### சாரதா தேவியார் போற்றியது

"மாதரில் அன்னை கண்டு வணங்கிடுந் தூயநேயா,
கோதறுத் தென்னையாண்டு கொண்டனை; குருவுந்தாயும்
நாதனும் உலகும் செல்வ நலங்களுநீயே; உன்றன்
பாதமே மோட்ச மென்ருள்" பத்தினித் தெய்வமாங்கே.

பிடித்தனை யென்கரத்தைப் பெற்றனன் புதிய வாழ்க்கை,
படித்ததெல் லா முன்சித்தப் படிசெயும் பணிவே யெந்தாய்!
தடித்தகா மாதிப்பேய்கள், சங்கடஞ் செய்யாதுன்றன்
அடித்திரு மலரை நெஞ்சில் அனுதினம் வழிபட்டேனே.

அடக்கரும் புலனை வென்ருய் அருந்தவமுனிவர் தேவர்,
கடக்கரும் வெய்ய காமக் கடலினைக் கடந்தாய்; உன்னைத்
தொடத்தகுந் தூயதன்மை தொண்டுடன் அளித்தாய்; ஞானப்
படகென வந்து நானும் பவக்கடல் கடக்கச் செய்தாய்.

### பரமஹம்ஸர் வணங்கியது.

இத்தகை அன்பு செய்யும் இனியநன் மனைவி தன்னை
முத்தனுய் பரமஹம்ஸன் முன்அவதரித்து நிற்கும்
சத்திதாய் என்று வாசச் சந்தனப் பூக்கள் கொண்டு
பத்தியாய்ப் பூசை செய்து பரமவா னந்தனுனன்.

மாதவம் நீயே; சொல்லு மந்திரம் நீயே; யோக
சாதனம் நீயே; தெய்வ சக்தியு நீயே; ஆத்ம
போதமு நீயே; சுத்த போகமு நீயே; ஜோதி
நாதமு நீயே; உன்னை நம்பினேன் ஞானத்தாயே!

தேவியே வணக்கம்; மூலத் தீயைமே லேற்றி யென்றன்
ஆவியே ரின்பத் தேனை அருந்திடச் செய்யும் வீறு
மேவிய சுத்த சக்தி வெள்ளமே, கள்ள மின்றிப்
பூவடி மலரைப் பற்றித் தியானித்தேன் புனிதவாழ்வே!

-யோகி சுத்தானந்த பாரதியார்.



## ஸ்ரீ சாரதா தேவியாரின்
# நூற்ருண்டுப் பிறப்பு விழா

(ஆசிரியர்)

மாதங்களுள் சிறந்தது மார்கழிமாதம். கீதையில் தமது விபூதி யோகத்தை விளக்கும் பத்தாம் அத்தியாயத்தில் கிருஷ்ண பரமாத்மா "சாமங்களில் யான் ப்ருஹத்ஸாமம் என்ற பெரிய சாமம்; சந்தங்களில் நான் காயத்திரி; மாதங்களில் நான் மார்கழி; பருவங்களில் மலர் சான்ற இளவேனில்," என்கிருர். அவர் தோன்றிய காலத்திலேயே, கன்னிப்பெண்கள் காத்யாயனியை வழிபடும் விரதம் இருந்தது. இது மார்கழி முதல் நாளிலிருந்து அனுட்டிக்கப் பட்டது. இந்த நோன்பு நோற்கும் வழக்கம் தமிழ்நாட்டிலும் இருந்துள்ளதென்பதை பரிபாடல் என்னும் பண்டைத் தமிழ்ப் பாடல்களிற் காணலாம். இவ்வழக்கத்தையொட்டிப் பாடப்பெற்றவையே திருவெம்பாவையும் திருப்பாவையும், திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் அடக்கியுள்ளதத்துவ விளக்கத்தைபிறிதோரிடத்தில்காண்க, தனது பாவனு முதிர்ச்சியால், தான் வளர்ந்த காலத்தையும் இடத்தையும் கண்ணன் வாழ்ந்த துவாபர யுகமாகவும் கோகுலமாகவும் மாற்றிக்கொண்ட ஆண்டாள் பாடலில் இந்த நோன்பின் முழுக் கருத்துக்களும் அழகாய் அமைந்துள்ளன. திருவெம்பாவைக்கடைசிப் பாட்டில் வரும் மார்கழி நீராட்டு திருப்பாவை முதல் பாட்டிலேயே இடம்பெற்றுள்ளது. இவ்விரு நூல்களும் மார்கழியிலே ஓதப்பெறுவன. இந்த வழக்கம் இடைக்காலத்தில் பௌத்தர்களாலும் சமணர்களாலுங்கூட கையாளப்பட்டு வந்த ஒன்ருகும்.

இவ்விதம் சைவர்களாலும், வைஷ்ணவர்களாலும் ஏனையோராலும் பல நூற்ருண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வரும் மார்கழித்திங்களானது சென்றநூற்ருண்டில் நாவலர் பெருமான், சாரதாமணி தேவியார், சுவாமிவிவேகானந்தர், பகவான் ரமணர் ஆகிய நால்வரின் ஜென்ம வைபவத் தொடர்பால் ஓர் புதுச் சிறப்பையும் பெற்றுள்ளது, நாவலர் ஜென்மநாள் சித்திரபானு (1822) மார்கழி அவிட்டம்; சாரதாதேவியார் பிரமாதீச (1853) மார்கழிப்பூரம்;

விவேகானந்தர் ருதிரோற்காரி (1863) மார்கழிச்சதயம்; ரமண மூர்த்தி பிரமாதி (1879) மார்கழிப் புனர்பூசம். பன்னிருஆழ்வார்களுள் ஒருவராய்ப் புகழ்ந்து கொண்டாடப்படும் ஆண்டாளைப் போலவே பூரநட்சத்திரத்தில் அவதரித்த சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டு விழா நிகழும் விஜய வருஷம் மார்கழிமாதம் பன்னிரண்டாந் தேதி (27-12-53) ஞாயிற்றுக்கிழமை பொருந்தியுள்ளது. அன்று தொடக்கம் அடுத்த மார்கழிமாதம் வரைக்கும் அவ்விழாவைத் தொடர்ந்து கொண்டாட ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினால் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்தொடர்பில் "ஆத்மஜோதி"யும் தூய அன்னையின் திருவுருவக்காட்சியுடன் வெளிவருகின்றது.

பெண்மையும், தாய்மையும், இறைமையும் ஒருங்கே பொருந்தித்தோன்றிய ஸ்ரீசார்தா தேவியாரின் அவதாரத்தால் பெண்ணுலகு பெற்றபெருமைஅளப்பரிது. இந்தப்புனிதஅம்மையாரின்வரலாற்றை வாசித்து அன்னாரின் அமிர்த மொழிகளைச் சிந்திப்பதிலும் பார்க்க விசேடித்த ஓர் விரதத்தை தற்கால இந்துக் கன்னியர்க்கு இம்மாதத்தில் எடுத்துரைக்க முடியாது. பகவான் ஸ்ரீராம கிருஷ்ணருக்கு ஸ்ரீசாரதா தேவியார் பாரியாக வந்தது ஓர் அற்புத முறையிலாகும்; அவரது லீலைகட்குத் துணைக்கருவியாக அமையவே அம்மையார் அவதரித்தனரெனலாம். இந்த மாபெரும் உண்மையை, "தரணியுய்ய இல்வாழ்க்கைத் தகைமை ஈதென்றறிவுறுத்த, வருநன் மரபிற் சாரதை மாமணியாந் திருவை மணந்ததுவும்" என்று விபுலானந்த அடிகள் தாம் பாடிய ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் சரிதப் பதிகத்தில் அழகுபெற விளக்கியுள்ளார்.

ராணி ராசமணியாரின் கனவில் தோன்றி "யான் இனிப் பேழையில் அடங்கிக் கிடப்பதைப் பொறுக்கமாட்டேன்; சீக்கிரம் பிரதிட்டைசெய்" எனக்கட்டளை கொடுத்து மறைந்த பரதேவி இன்று எழுந்தருளியிருப்பது கல்கத்தாவுக் கருகாமையில், கடவுண் மாநதியாங் கங்கைக் கரையில் அந்த ராணியால் கட்டப்பட்ட தக்ஷிணேச்சரத்துக் கோயிலிலாகும். இந்த ஆலயத்தில் பூசனைத் தொழில்செய்துவருங்காலத்து ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்திப் பெருக்கானது கரைபுரண்டோடியது. அப்போது அவரிடம் தோன்றிய மெய்ப்பாடுகளின் மகிமையை அறியாத மக்கள் அவருக்கு மூளைக்கோளாறுகள் ஏற்பட்டுள்ளதாக முடிவுகட்டினர். தாயாராகிய சந்திரமணிதேவி



யாரும் அதை நம்பிவிட்டனர். கையாண்ட மருத்துவமும் மந்திரமும் பயன்தராமையால், பையனை இல்லறத்தில் புகுத்துவதே தக்க வைத்தியமெனத் தீர்மானித்து பெண்தேடி அலைந்தனர். தாயாரதும் தமையனாரதும் வீண் முயற்சியையும் ஏமாற்றத்தையும் யோகசித்தியால் அறிந்த ராமகிருஷ்ணர். ஒருநாள் முகமலர்ச்சியுடன் அவர்களை நோக்கி "ஏன் வீணாய் அலைகின்றீர்கள்? என் அத்யாத்ம சேவைக்கென்றே இறைவன் சிருஷ்டித்த பெண்ணை நமக்கு அயலூரான ஜெயராம்பட்டியில் இராமச்சந்திர மஹோபாத்தியாயரது குமாரத்தியாகக்காண்பீர்கள்." என்றனர். இந்த நூதனமுறையில் கண்டுபிடிக்கப்பட்டுஆறுவயசில் பரமஹம்ஸரை மணந்து கொண்ட சிறுமியே இன்று உலகின் நாற்றிசைமக்களாலும் போற்றி வணங்கப்படும் உத்தமியாம் சாரதாமணி தேவியாவார்.

நாணம், அடக்கம் இரண்டையும் ஆபரணங்களாக அணிந்து கிராமப்பெண்ணாகவே வாழ்வு நடாத்திய தூய அன்னையின் அவதார மகிமையை அறிந்து கொள்ளும் பாக்கியம் பலருக்குக் கிடைக்கவில்லை. அவரது பெண்மையும் தாய்மையும் அவரின் ஈடு இணையற்ற திறமையை மறைத்து நின்றன. குருதேவரிடம்வந்து திரும்பும் பக்தர் கூட்டங்கள்கூட தேவியாரின் உயர்ந்த ஞானநிலையை உணராதிருந்தனர். அவருடன் மிகவும் நெருங்கிப் பழகிய சிலருக்கன்றி ஏனையோர்க்கு அவரின் ஒப்பற்ற ஞானசக்தி தென்படவேயில்லை, அதின் இரகசியத்தை அன்னையின் சொந்தமொழிகளிலேயே அறிவது நல்லது. திவ்வியகாட்சிகளையும் தெய்வசக்திகளையும் வெளிப்படுத்தி சித்திகள் செய்யாத பெரியோர்கள் ஆத்மீக நிலையில் உயர்வடைந்தவர்களோவெனச் சந்தேகிக்கும் மனப்பான்மை சர்வ சாதாரணமான ஒன்றாகும். இக்குணம் படைத்த ஓர் பக்தனைப் பார்த்து அன்னையார் கூறியதாவது;- பகவானை உணர்வதால் என்ன உண்டாகும் என்று நினைக்கிறாய்? அதனால் ஒருவனிடம் கொம்பு முளைக்குமா? இல்லை. ஒருவனது மனம் சுத்தமடையும்; சுத்தமனதின் மூலமாக, போதமும் ஞானத்தின் பிரகாசமும் கிளம்பும்; இவ்வளவுதான்,"

பின்னுளில் தூய அன்னையாரின் அருளால் ஞானமடைந்தோர் கணக்கிலர். அவர்கட்கு அவர் உபதேசம் அருளிய விதமும் விசித்திரமானது, தம்மிடம் சரண்புகும் அடியார்களின் பரி பக்குவத்தை

ஞானதிருஷ்டியால் அறிந்து அவரவர்கட்குப் பொருந்திய மந்திரத்தையும் சாதனேயையுமே அருளுவார். அதற்கு வேண்டிய கிரியை மிகவும் சுருக்கமாயிருக்கும். காலைப் பூஜை முடிந்தபின் செய்யும் உபதேசமானுல், மூன்று நிமிஷங்கட்கு மேல் எடுக்க மாட்டார். இது விஷயங்குறித்து பரமஹம்சதேவரின் தவச்செல்வர்களுள் ஒருவரான சுவாமி சாரதானந்தருக்கும் அவரது சீடனுக்குமிடையே நடந்த சம்பாஷணை தேவியாரின் அதி உன்னத ஞான முதிர்ச்சியையும் அதனுல் அவர் அடைந்திருந்த ஆத்மசக்தியையும் தெளிவாகக் காட்டுகிறது. சீடன் சுவாமியை நோக்கி "நீங்கள் தீக்ஷையளிப்பதற்கு அரைமணி நேரம்வரையில் எடுக்கிறீர்கள். தேவியாரோ இரண்டு மூன்று நிமிஷங்களுள் முடித்து விடுகிருர். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் யாது?" எனக்கேட்டபோது சாரதாநந்தர்கூறிய பதில்பின்வருமாறு: "தேவியார் ஒரு சீடனைப் பகவானிடம் சமர்ப்பித்து அவனைப் பகவான் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமானுல், அந்தச் சீடனைத் தமது கையால் தொடுவதும், தமது மனதினுல் அப்படிச் சங்கற்பிப்பதும் போதும்; பகவான் அவனை ஏற்றுக்கொள்வது நிச்சயமான விஷயம். ஆனுல் என்னைப் போன்றவர்கட்கு அந்த உறுதி உண்டாக சுமார் அரை மணிநேரம் தியானத்தில் அமர்தல் அவசியமாகிறது."

ராமகிருஷ்ணர் 1886ம் ஆண்டில் மகாசமாதியடைந்து இருவாரத்தால் தேவியார் பிருந்தாவன யாத்திரையை ஏற்றனர். அது முடிந்துதிரும்பியதும் சிறிதுகாலம் காமர்ப்புகூரில் வசிக்கவேண்டிய நியதி ஏற்பட்டது. அப்போது வறுமையால் கஷ்டப்பட்டார்; தமது பிற்கால வாழ்க்கையைக்குறித்து ஏங்கிக் கலங்கியதுமுண்டு. அவ்விதம் அவர் மனச்சோர்வுற்ற வேளைகளில் பரமஹம்ஸர் காட்சியளித்து ஆறுதல் கூறினர்; "புத்திர சிகாமணிகள் பலரைத் தந்துள்ளேன்" என்று துறவிச் சீடர்களைப்பற்றி நினைவூட்டுவார். அவர்களின் தலைவரான விவேகானந்தர் அம்மையாரிடம் அளவற்ற பக்தி விசுவாசம் கொண்டிருந்தார். அன்னுர் 1893-ம் ஆண்டில் அமெரிக்காவில் அடைந்த மாபெரும் வெற்றிக்கும், அதே ஆண்டில் அம்மையார் செய்த பஞ்சதவத்திற்குமிடையேயுள்ள தொடர்பை அவர்கள் இருவருந்தான் அறிவர். அம்மையாரின் ஆசியையும் சம்மதத்தையும்



கடிதமூலம் பெற்றபின்னரே விவேகானந்தர் கடல் கடந்து செல்ல உறுதிகொண்டனரெனலாம்.

ராமகிருஷ்ணமடமும் சங்கமும் நிறுவப்பட்டபின், அந்த நிலையங்களின் சூக்கும வடிவான மெய்ஞ்ஞானத் திருக்கோவிலின் மூலஸ்தானத் தெய்வமாக விளங்கியவர் ராமகிருஷ்ணரெனில், அதில் எழுந்தருள் மூர்த்தி விவேகானந்தர், அடியார் கணத் தலைவர் பிரம்மானந்தர், அந்த மன்னருக்கு அமைச்சர் சாரதானந்தர், குருதேவரின் திருமேனிச் சின்னங்களின் அர்ச்சகர் ராம கிருஷ்ணனந்தர். ஆனுல், மடத்திலும் சங்கத்திலும் நடந்த வைதிக லௌகிககருமங்கள் அனைத்தும் சாரதாதேவியாரின் ஆலோசனைப்படியே நிறைவேறின. எனவே, அம்மையாரே அவற்றின் ஆதார சக்தியாகவும், அடியார்களின் புகலிடமாகவும் விளங்கினரெனக் கூறுதல் மிகையாகாது. இந்த உண்மையை முற்றிலும் உணர்ந்துவாழ்ந்தவர் விவேகானந்தர். அவரின் தீர்க்கதரிசனவாக்கொன்றை இங்கு வாசகர்கட்குத் தெரியப்படுத்த விரும்புகிறேம்:—

"அன்னையினுடையவாழ்க்கையின் மிகவும்ஆச்சரியமான, அற்புதமான அம்சங்களை நீங்கள் இன்னும்அறிந்துகொள்ளவில்லை. அவற்றை உலகம்முழுவதும் அறியுங்காலம் கட்டாயம் வரும். சக்தியின் துணையின்றி உலகம் உய்வடைய முடியாது. பாரதநாடு பலங்குன்றி மற்றையதேசங்களுக்கு பின்னணியில் இருப்பதின் காரணம் சக்தியை நாம் அவமதித்ததாலன்ருே? இந்தியாவில் சக்தியின் சிறப்பையும் அதின் அத்தியாவசியத்தையும் நினைவூட்டவும் நிலை நாட்டவுமே அன்னை அவதாரம் எடுத்துள்ளார். அன்னுரை ஆதாரமாகக்கொண்டு பல கார்கிகளும் மைத்ரேயிகளும் மறுபடியும் உலகில் தோன்றுவர்." என்றுர்.

இந்த இடத்தில், சுவாமி விவேகானந்தரின் மறைவுக்குப் பின் நடந்த ஓர் உருக்கமான நிகழ்ச்சி நினைவுக்கு வருகின்றது. தமது உத்தமஞான புத்திரனின் மகாசமாதியைக் கேள்வியுற்ற சாரதாதேவியார் பேலூரையடைந்து, சந்தனக்கட்டையால் அடுக்கப்பட்ட ஸதையில் அவருடைய உடல் வீற்றிருந்த காட்சியைக் கண்டதும்

"புத்திர சிங்கமே! உன்னுடைய வருகையால் பூமியிலுள்ள அஞ்ஞானஇருள் குறைந்துள்ளது. இப்பொழுது நீ இறக்கவில்லை. உனது பொய்யுடலேஅக்கினியிலடங்குகின்றது. உனதுமெய்யுடல்என்றும் அழியாதது. பரிசுத்தமானது. அது சுத்த சைதன்ய சொரூபத்தோடு ஒன்றிவிட்டது" என்று கூறிஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். தேவியார் விவேகானந்தருக்குப் பின் பதினெட்டு ஆண்டுகள் உயிர்தரித்திருந்து உலகமாதாவாக விளங்கினர். "இறையின் மாத்ரு பாவத்தை உலகுக்கு விளங்க வைக்கவே என்னை ராமகிருஷ்ணர் விட்டுப்போயுள்ளார்." என்று ஒருமுறை அவரே பகர்ந்துள்ளார். தாய்மைக்குரிய அருங்குணங்களான அன்பு, கருணை, பொறுமை, சேவை, தன்னலமின்மை குற்றங்காணுமை, சமநோக்கு ஆகிய அனைத்தும் உலகில் முன்னென்றுங் கண்டிராத அற்புதமுறையில் அவரிடம் சோபித்தன. தேவியாரின் பெருமையைப்பேசி, புகழைப்பாடி, நாமெல்லோரும் நற்கதியடைவோமாக!

---

## நின் திருப்பணியே புரிய அருள்.

ராகம்: சன்முகப்பிரியா] [தாளம்:- ஆதி

பல்லவி

துறவுக்கும் தூய்மைக்கும் உருவே!-ஞானச்
சுடர்பொங்கி எழுகின்ற திருவே! (துறவு)

அனுபல்லவி

குறைவற்ற இன்பத்தின் உறைவிடம் நீயே!
குன்ருத தவவாய்மை குடிகொண்ட தாயே! (துறவு)

சரணம்

நெஞ்சு மலரவரும் நீள்கதிர் ஆனுய்!
நினைக்கும் அடியார் இன்னல் நீங்குமே தானுய்!
தஞ்சம் என அடைந்தேன் சாரதா மணியே!
தமியேன் புரிய அருள் நின்திருப் பணியே!

—ர. அ.

உ

தங்களுக்கு எவ்விதமான
அச்சுவேலைகள் வேண்டும்?

"ஜோதி" வெளியூர் அன்பர்களின்
எவ்விதமான அச்சுவேலைகளையும்
ஏற்று விசேஷ கவனத்துடன்
சுத்தமாக குறைந்த செலவில்
அழகுற அச்சிட்டு
குறிப்பிட்ட நேரத்தில்
V. P. மூலமாவும் அனுப்பப்படும்,
விரும்பும் மாதிரி தாள் அனுப்பி
அச்சு விகிதம் தெரியலாம்
தங்கள் தேவைக்கு
எழுதுங்கள்.

மானேசர்
சரவண அச்சகம்
போன் 329 நாவலப்பிட்டி

## சாரதாமணி

எடுப்பு

சார தாமணி சர்வ காரணி
சற்குணிகல் யாணி சகலகலை வாணி (சாரதா)

தொடுப்பு

பாரதப் பெண்மையின் பூரண ரூபிணி
பக்தர்நெஞ்ச மெல்லாம் நர்த்தனஞ்செய் வேணி
(சாரதா)

முடிப்பு

வான்புவி வணங்கும் தேன்பதத் துறவி,
வள்ளல்ராம கிருஷ்ணர் நல்லறத் தலைவி;
ஆன்மஜோதி காட்டும் ஞானக்கண் மணியே,
அம்புவிக்கெல் லாம்பே ரின்ப மூட்டும்தாயே!
(சாரதா)

மந்திரப் பொருள்நீ, தந்திரக் கலைநீ,
மாதவப் பயன்நீ, சாதனைத் திறன்நீ;
சிந்தனைக் கினிக்கும் சுந்தரக் கனிநீ;
திக்கிலார் துணைநீ, இக்கணம் அருள்நீ, (சாரதா)

*"பரமஹம்ஸதாஸன்"*

## எப்போதுன்னருள்

எடுப்பு

எப்போதுன் னருள்வருமோ? என்றுதானிந்த
ஏழையின் கலி தீருமோ? (எப்போ)

முடிப்பு

அப்பனே பொன்னம்பலத் தாடும் சிவக்கொழுந்தே!
அடியார்க் கிரங்கும் ஞான நடராஜக் குருவேந்தே!
(எப்போ)

சிவநேசத் தொடர்பூட்டிப் பவநாச முறவாட்டித்
தெளிந்த குருவடிவில் குளிர்ந்தகண் ணொளிகாட்டி,
சிவராஜ யோகத்தில் தவருநிஷ்டை கூட்டி
ஜெகஜோதிக் கடலாட்டச் சுகஞான வடிவாக
(எப்போ)

*-"பரமஹம்ஸதாஸன்"*

# ஸ்ரீ சாரதாதேவி அர்ச்சனைமாலை

கங்கை நதிபாய் வங்கஞ் சீர்பெற
சிங்கவா கினியமர் ஜெயராம் பட்டியில்
இராமச் சந்திர மஹோபாத் தியாயரின்
அருந்தவத் துதித்த அம்பிகை போற்றி!
மஹாபதி விரதையாம் லோபா முத்திரை
சீதை சாவித்திரி திலக வதிபோல்
மாதர சிகளால் மகிமை பொருந்திய
பாரத நாட்டின் பழம் பண்புக்கோர்
உதாரண மாய்வந் துதித்தனை போற்றி!
சாரதை யென்னுந் தனிப்பெயர் தாங்கி
பாரெங்கும் கீர்த்தி படைத்தனை போற்றி!
காளி யன்பிற் கரைந்து நின்ற
கதாதர நாமக் கடவுள் பித்தர்க்கு
தாயுஞ் சேயுந் தாரமு மாக
ஓயாச் சேவை உவந்தனை போற்றி!
தக்ஷிணேஸ் வரத்தவர் தவம்புரி காலை
பக்தி சாதனைகள் பற்பல பயின்றே
மெத்தவுஞ் சித்தி மேவினை போற்றி!
பத்தா வானஅப் பரம ஹம்ஸரை
அர்த்த நாரீச்வர ராக்கினை போற்றி!
அன்னார் அருளிய அளப்பரு ஞானத்தை
பின்னாள் பலர்க்கும் பிறவிநோய் தீர
வள்ளல் போலள்ளி வழங்கினை போற்றி,
கன்னிகை யாகக் கடுந்தவங் காத்தும்
உன்னத நெறிநில் உத்தமப் புதல்வரை
மன்னுல குய்ய வளர்த்தனை போற்றி!
வேந்தர்க்கும் வேந்தாம் விவேகா னந்தர்க்கும்
சாந்த சொரூபியாம் சாரதா னந்தர்க்கும்
அந்தமில் ஆற்றல் அருளினை போற்றி!
அறநெறி வழுவா அகோர மணியுடன்
துறவிற் சிறந்த கௌரி தாசியும்
கோலப் மாவும் யோகி யம்மையும்
மார்கரெற் னோபிள்போல் மங்கையர் பலரும்
தெய்வமாய்ப் பணிந்த தேவியே போற்றி!
பண்டிதர் பாமரர் பாலர் விருத்தர்
பெண்கள் ஆண்கள் எனும் பிரிவின்றி
மன்பதை முழுதையும் மக்களாய்க் கருதி
அன்னிய மென்பது அணுவு மின்றி,
அன்புடன் காத்த அன்னையே போற்றி!
தன்பெருமை யறியாத் தனிப்பெரு மாட்டி!
உன்பெருமை எளியேற் குரைத்தற் கரிதாம்,



பூரண யோகியாம் ராம கிருஷ்ணரே
நாரணி யெனப்பணி நாயகி போற்றி!
தயையே வடிவாந் தாயே போற்றி!
பொறுமைக் கணிகலம் ஆனாய் போற்றி!
துறவர் தமக்கோர் துணையே போற்றி!
நல்லவர் விரும்பும் நட்பே போற்றி!
பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி!
அம்மையே ஒப்பிலா அரும்பொனே போற்றி!
இம்மைச் சுகங்கள் ஈவாய் போற்றி!
அம்மைப் பயனையும் அளிப்பாய் போற்றி!
ராஜ ராஜேச்வரி ரஞ்ஜனி போற்றி!
நாத ரூபிணி நடேச்வரி போற்றி!
மஹா லக்ஷ்மி மகேச்வரி போற்றி!
திரிபுர சுந்தரி தீக்ஷிதா போற்றி!
காத்யா யனியே கல்யாணி போற்றி!
ஆதி சக்தியாம் ஆரணி போற்றி!
விமலையே போற்றி! வித்தகி போற்றி!
சங்கரி போற்றி! சாம்பவி போற்றி!
சுந்தரி போற்றி! சுதந்தரி போற்றி!
மாதவி போற்றி! மனோன்மணி போற்றி!
சிற்பரை போற்றி! சிவையே போற்றி!
பார்வதி போற்றி! பகவதி போற்றி!
வல்லபி போற்றி! வாணியே போற்றி!
பைரவி போற்றி! பவானி போற்றி!
பூரணி போற்றி! புராதனி போற்றி!
கௌரியே போற்றி! காளியே போற்றி!
பழமையே போற்றி! புதுமையே போற்றி!
அழகே போற்றி! அணியே போற்றி!
கண்ணே போற்றி! காத்தே போற்றி!
விண்ணே போற்றி! மணியே போற்றி!
அன்பே போற்றி! அர்வமே போற்றி!
இன்பே போற்றி! இனிமையே போற்றி!
போற்றி! போற்றி! நின்பூங்கழல் போற்றி!
போற்றி! போற்றி! நின்பொன்னருள் போற்றி!

சரணம் சரணம் சாரதா மணியே!
சரணம் சரணம் சற்குரு தேவி!
சக்தி ஓம்சக்தி சுத்த சக்திஓம்!
சக்தி ஓம்சக்தி சுத்த சக்திஓம்!
சக்தி ஓம்சக்தி சுத்த சக்திஓம்!

(முற்றொடர்ச்சி)

ஞானவாசிட்டம்

# சிகித்வஜனும்-சூடாலையும்

[சு-பா]

கும்பமுனி விடைபெற்றுக் கொண்டார். சிகித்வஜன் பூர்வ வாசனைகளொழிந்து தன்னுள்ளே தானாகி, நிர்விகல்ப சமாதியடைந்தான். கும்பமுனியுருமாறி அழகுப் பூங்கொடியான சூடாலை தன் அரசையடைந்து ஆட்சி செய்தாள்; சில மாதங்கள் சென்றன; மீண்டும் தன் கணவனைக் கும்பமுனி வடிவாக வந்து கண்டாள்; ப்ரஹ்மசமாதியில் லயித்துப் புறவுணர்வற்ற சிகித்வஜனைத் தனது யோக சக்தியால் எழுப்பினாள். "ப்ரஹ்மானந்தம்; பரமகல்யாணம்; கட்டுகள் விட்டன! ஆனந்தக் களிப்பெழுந்தது! அந்தப் பரமசுகத்தை ஏதென்று சொல்வேன்! அது சொல் மனங்கடந்தது. இத்தகைய பரமானந்த வாரிதியை என்னுள்ளத்தில் காட்டிய ஞானகுருவே! வணக்கம்!" என்றுஇன்பச்சிலிர்ப்பெடுத்துக் களிதுள்ளினான். சிகித்வஜன் மனம் முற்றும் அடங்கியது. ராகத்வேஷங்கள் ஒடுங்கின.

இந்த ஞானங்கனிந்த தூயநிலையைச் சூடாலையறிந்தாள். அரசனை மீண்டும் நகருக்கு அழைத்துச்செல்லக் கருதினாள். மன்னனைச் சிலகாலம் தனது யோக சித்தியால் சோதிக்கலானாள். கும்பமுனியாகி ஒரு நாள் கலங்கிய முகத்துடன் மன்னனெதிரே வந்தாள். "அறிவுமலையான தாங்கள் கலங்குவதேன்?" என்றான் மன்னன்.

கும்ப:- மன்னவோ! தேவலோகஞ் சென்றிருந்தேன்; திரும்பிவருகையில் மேகமண்டலத்தில் தூர்வாச மஹரிஷியைக் கண்டேன்; "கரியவுடை யணிந்து, காதலனை எதிர்பார்க்கும் வேசைபோல ஏன் துருதுருக்கிறீர்?" என்று தமாஷாகச் சொல்லி வணங்கினேன்; தூர்வாசர் கோபத்தில் என்தமாஷ் குங்குலியம் போட்டதுபோலக் குப்பென்றது. "என்னை அவமதித்தாய்; **நீ இரவுதோறும் பெண்ணாகக் கடவாய்!**" என்று சபித்து மறைந்தார். இனி நான் இரவுதோறும் பெண்ணுருவெய்துவேன்; என் செய்வேன்!



சிகித்:- வருந்தாதீர்; இப்பெண்ணுரு உடலுக்கு மட்டுமே! ஆன்மா என்றும்வேறுபடாதன்றோ? அதையறிந்து அதுவானால்ஆண் பெண் வேறுபாடென்ன செய்யும்?

இவ்வாறாக இரவில் சூடாலை பெண்ணுருவாகவும், பகலில் கும்பமுனியாகவும், மன்னனுக்கருகே வாழ்ந்துவந்தாள். மன்னன்மனத்தில், எவ்வித விகாரமும் உண்டாகவில்லை. ஒருநாள் சூடாலை, "மன்னவ! இரவுதோறும் மதனிகையென்ற இளம் பெண்ணுருவெய்துகின்றேன்; பயனென்ன? இளமையின்பந் துய்க்கவேண்டாமா? தங்களைவிட எனக்கு ஏற்ற காதலன் வேறுண்டா? இன்று நிலாவெழுந்ததும் நாம்மணம்புரிவோமாக!" என்று மன்னனை வசப்படுத்தினாள். மன்னனும் சம்மதித்தான்; இரவு திருமணம் புரிந்து இருவரும் ஆசைப்பற்றற்றுச் சுயேச்சையாக மந்தரமலையில் உலாவலாயினர். திடீரென ஒருநாள் தனது யோகமாயையால், இந்திரனை மன்னன்முன் தோன்றி, "தேவரீர் எனது இந்திரலோகத்திற்கு எழுந்தருளுக; அங்கு அரம்பையரின் இன்பமெய்துக" என்று வருந்தியழைக்கச் செய்தாள். "இடம், காலம், பெயர், வடிவெனும் வேற்றுமை எனக்கில்லை; விண்ணின்பமும் யான் வேண்டேன்; தாங்கள் விடைபெற்றுக்கொள்ளலாம்; அந்த ஆசை இங்கில்லை" என்றான் சிகித்வஜன். இந்திரனுரு மறைந்தது. மற்றொரு நாள் தனது யோகமாயையால் ஒரு காதலனையுண்டாக்கி அவனோடு மன்னன் கண்ணெதிரே கட்டிக்குலாவினாள். அதிலும் அவன் மனம் விகற்பமடையவில்லை. காட்சி மறைந்தது. முன்போலவே சிகித்வஜன் அமைதியாக நடந்துகொண்டான். காமம், வெகுளி, மயக்கம் கட்டோடு நலிந்ததைக் கண்ட சூடாலை, முடிவாகத் தன் சுயவடிவுகொண்டு ஞானக்கணவன்முன்நின்றாள், "எதிரிலிருப்பது சூடாலையா? பெண்ணே!நீயார்?" என்றான்சிகித்வஜன். "நாதா! நானேகும்பமுனி;நானேஆத்மஞானோபதேசஞ்செய்தேன்; நானே மதனிகை; நானேதங்களை இம்மாயங்களாற் சோதனைசெய்தேன்;சமாதியில் உண்மைவிளங்கும்" என்றாள், மன்னன் சமாதியிலாழ்ந்தான்; சூடாலையின் பெருமையைக் கண்டான். "என் அருமைத் துணைவீ! நின்னன்பும்,அறிவும், திறனும், யோகவல்லமையும் என்னை ஈடேற்றின. பெண்மணிவிளக்கே! உன்னால் உண்மையைக் கண்டேன். உன்னைப் போன்றார்யாருளர்? நான் நானானேன்; நினக்குக் கைமாறென்ன செய்வேன்? என் குருவே!" என்றுருகி அன்புபெருகி நின்றான்.

சூடாலை:— "நாதா! சங்கற்ப விகற்பங்களொழிந்தன! ஐய மகன்றது! ஆகாயம் போலத் தெளிந்து மாசற்றீர் சுத்தசைதன்யமானீர் உலகபாசம் உம்மைத் தொடராது! ஜீவன் முக்தரான தாங்கள் நகருக்கு வந்து மீண்டும் ஆட்சி வகித்தல்வேண்டும். நாமிருவரும் பற்றற்ற அன்புடன் மன்னுயிர்க்குப் பணி செய்வோம்" என்றாள். சிகித்வஜன் சம்மதித்தான் இருவரும் அரசர்க்குரிய அணியங்கங்களுடன் நகர் வந்தனர். மக்கள்இன்புடன் வரவேற்றனர். இருவரும் நீண்ட காலம் மன்னறம் வகித்து ஆருயிர்ப்பணிபுரிந்து விதேகமுத்தி சேர்ந்தனர்.

———

ஓம்

ஸ்ரீ ராம கிருஷ்ணய

## சிவகாமம் பெருக்குவாய்,

எடுப்பு

பவகாம மொழித்தின்பச் சிவகாமம் பெருக்குவாய்,
பரம கருணை நிதியே!—பசுபதியே! (பவ)

தொடுப்பு

நவரஸ அலங்கார நடராஜ துரையே!
கவலைக் கடலில் தள்ளும் அவல மிகுத்தபொல்லாப் (பவ)

முடிப்பு

அல்லும் பகலுமுன்னைப் புல்லத் துடித்து,நெஞ்சில்
ஊர்வக் கனல்பெருக்கி அன்பால் கசிந்துருகி
எல்லாவற் றையுமுன்றன் இணையடிக் கர்ப்பணித்து
இரண்டறக் கலந்திட விழைந்தேன்! இருவிகாரப் (பவ)

—பரமஹம்ஸதாஸன்.

---

பேர்வடிவப் பேச்சைப் பிழையென் றொதுக்கியுளே
நேராக நின்னையே நீதெளிவாய்—சார்பொன்றும்
நாடாதே வாடாதே நாற்புறமும் புந்திவிடுத்
தோடாதே யொன்றைப் பிடி.

———



ஓம்

# ஏழு திருப்பள்ளியெழுச்சி

## சிவபெருமான்

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

-மாணிக்கவாசகசுவாமிகள்.

## சிவசக்தி

அம்பொருட் சுருதியின் சிரத்தினி லாடி
அழகுறு மன்பர்த முளத்தின் வீற்றிருந்த
செம்பொருட் சிவப்பிர காசன தெழில்சேர்
திருவரு ளாகிய தெய்வநல் லணியே
வம்பினிற் றிரிதரு மதியிலி நாயேன்
மனவிடாய் கெடவலிந் தாண்டுகொண் டாளே
உம்பருக் குணர்வரி யாயெமக் கெளியாய்
ஒண் ணுதலே! பள்ளி எழுந்தரு ளாயே!

-தாத்தவராயசுவாமிகள்

## முருகன்

ஆடுறு மணிமயில் சிறைவிரித் ததன்மேல்
அருளொளி திகழநீ எழுந்தருள் முறைபோல்
பீடுறு மரகதக் குரகதம் பூண்ட
பெருந்தடத் தேர்மிசை எழுந்தனன் கதிரோன்

வாடுறு தாமரை நினதருள் அடைந்த
மாதவர் முகமென மலர்ந்தன எங்கும்
ஏடவிழ் மலர்ப்பொழில் பொதுளிய போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே!
-சிதம்பர சுவாமிகள்

## திருமால்

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கணையிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தருளாயே!
-தொண்டரடிப்பொடியாழ்வார்

## அருட்பெருஞ்சோதி

புன்மாலை இரவெலாம் புலர்ந்தது ஞானப்
பொருப்பின்மேற் பொற்கதிர் புலர்ந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்
சுத்தசன் மார்க்கசங் கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்
வானவர் நெருங்கினர் வாழியென் கின்றார்
என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ்சோதி
என்பதி யேபள்ளி எழுந்தரு ளாயே!
-இராமலிங்க சுவாமிகள்.

## ஸ்ரீராம கிருஷ்ணர்

வினைத்தொடர் புற்றபல் லுயிர்க்குலத் தோடு
விண்ணவர் மண்ணவர் யாவர்க்கும் அருளப்
பனித்தமெய்க் கருணைத் திருவுருக் கொண்டு
பாரினில் தட்சிணேஸ் வரஞ்சிறந் தோங்க



# சிவசக்தி பராசக்தியாகும் தன்மை

## திருவெம்பாவைப் பதிகத்தின் ஆழ்ந்த தத்துவங்கள்.

(இரசபதி)

வைகறையில் கண்விழிப்பர்; பகலெலாம் பிழைப்பிற்கு வழிதேடுவர்; இரவில் இளைப்பாறுவர் ஆன்மாக்கள்: இது என்றும் உள்ள நியதி. இரவு 30 நாழிகை; பகல் 30 நாழிகை. இங்ஙனம் 60 நாழிகை கொண்டது ஒரு நாள்; **இது நம் கணக்கு.**

தைத்திங்கள் முதல் ஆனிவரை பகற்காலம்; ஆடி முதல் மார்கழிவரைஇரவுகாலம்; இரவைஆறு பங்காக்க, அதில் ஒருபாகம் மார்கழி; **இது தேவ கணக்கு.** விடியற் காலத்தில் விழித்து, பரமனைப் பாடும் பகுதிக்குத் **திருப்பள்ளியெழுச்சி** என்றுபெயர்.

இனித்தபுன் முறுவல் இன்னமு தூட்டி
இருள்வினை கெடத்திரு அருள்வழி காட்டி
நனித்தவர் துதிஜகத் குருவடி வேற்ற
ராமகிருஷ் ணபள்ளி எழுந்தரு ளாயே!
-பரமஹம்ஸதாஸன்.

## ரமணமூர்த்தி

துலங்கிய செஞ்சுடர் தோன்றினன் முற்றுந்
துன்னிருள் சோர்ந்து தொலைந்தது மாதோ
மலங்கிய மூயலக மாயையை மிதித்து
மாநட மாகாளிக் காடிய தேவா
கலங்கிய சிலரைக் கருக்கட னின்று
கவலறு முத்தம கதிக்கரை காட்டும்
கலங்கரை விளக்கமாங் கண்ணுதற் றிருவேங்
கடரம ணபள்ளி எழுந்தரு ளாயே!
-முகவைக்கண்ணமுருகனார்.

விடியற்காலமான ஐந்து நாழிகையுள் உலகைத் தோற்றுவிக்கிறாள் சிவசக்தி. ஒவ்வொரு பகலும் கனந்தங்கிய அத்தேவியின் காப்பில் உளது. இரவில் ஆன்மாக்கள் அத்தேவியால் இளைப்பாறுகின்றனர். இங்ஙனம் விழிப்பும் பிழைப்பும் இளைப்பகல் நிலையும் விமல தேவியால் விளைகின்றன,

சிவமும் சக்தியும், இரண்டறக் கலந்த இன்ப உருவினர். அருளொடு கூடிய இந்நிலையை அத்துவிதம் என்பர். ஆணவ மறைப்பு முழுதும் அகலா ஆன்மாக்களின் கேவல நிலையைக் கண்டு இரக்கம் மிக்க இறைவன், இனிய அருள் பாலிக்க எண்ணுகின்றான்; அவ்வமயம், அவனில் இயைந்திருந்த அமலை அவனிலிருந்து பிரிந்து, பிரிந்தாலும் வேறாகாது சேர்ந்து செம்மாந்து இருக்கின்றாள். இந்நிலையில் பெரிய அந்த சிவசக்தி, பராசக்தியெனும் பெயர் பெறுவள்.

மாயையுடன் கலவாமல், மறைப்புச் சிறிதும் இல்லாமல் விளங்கும் ஞானத்தால் பராசத்தி விருப்பம், தொழில், அறிவு எனும் மூவகையாய், எண்வகையாய், ஒன்பது வகையாய், இன்னும் பல திருவுருவங் கொள்ளும் அந்த அமலை, தனது நிலைக்குரிய கோலங் கொள் சத்தரோடுதான் சார்ந்து நிற்கின்றாள். உயிர்கட்குப் படைப்பாதி நிகழ்த்தி உதவ, முதன்முதலில் மகத்தான சதாசிவத்துடன் மனோன்மணியாகி, ஆன்ம மூர்த்தியை யுள்ளிட்ட சர்வபூத தமனியை உணர்த்தி எழுப்புகிறாள்.

சர்வபூத தமனி சூரிய மூர்த்தியைச் சார்ந்துள்ள பலப்பிரமதனியை உணர்த்திஎழுப்புகின்றாள். பலப்பிரமதனி சந்திரமூர்த்தியை இதயங்கொண்ட பலவிகரணியை உணர்த்தி ஊக்குகின்றாள். பலவிகரணி ஆகாயமூர்த்தியை அகமிருத்திய கலவிகரணியை உணர்த்தி எழுப்புகின்றாள். கலவிகரணி வாயு மூர்த்தியை மனங்கொண்ட காளியை உணர்த்தியெழுப்புகின்றாள். காளி தேயு மூர்த்தியைக்கொண்ட ரௌத்திரியை உணர்த்தியெழுப்புகிறாள். ரௌத்திரி அப்புமூர்த்தியை அகத்திலிருத்திய சேட்டையைத் துயிலுணர்த்தித்தூண்டுகிறாள். சேட்டை பிருதிவி மூர்த்தியை உளங்கொண்ட வாமையை உணர்த்தி ஏவுகின்றாள் பராசத்தியிலிருந்து வெளியாகும் இவர்கள் அபரசத்திகள் எனப்பெறுவர்.



சர்வசம்மாரம் காரணமாக ஒடுங்கியிருந்தவரை மலர்த்துவது, உணர்த்துவதெனப் பெற்றது. மண், நீர், நெருப்பு, காற்று, விண், மதி, பரிதி, உயிர் இவைகளில் உயிர்ப்பாயிருந்த சிவசக்திகள், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில் நிகழ, அதற்கேற்ற உருவும், குணமும், பெயரும் தாங்குவர்.

உணர்த்தலும் ஊக்கலும் விளைத்தபின் எழுகின்றனர்; எழுந்ததும் பரனைப்பாடுகின்றனர். பாடிப்பாடிப் பெருமானருளைப்பெறுகின்றார்; படைப்பாதி நிகழ்த்துகின்றார்; பரவிய உயிர்களைப் பரிகாரப்படுத்துகின்றார்; சிவபிரான் மலரடியில் சேர்க்கின்றார்.

அபர சத்திகள் ஒருவரையொருவர் எழுப்பும் செய்திகள், திருவெம்பாவையில் எட்டுப்பாட்டுகளால் அறியப்பெறும்; அதன்பின் துதிப்பாடல்கள். அறிவால் சிவமானவர் மாணிக்கவாசகர். அவர் ஒரு சமயம் தேயு சொரூபமான திரு அண்ணாமலையிலிருந்தார். ஒரு நாள் வைகறைவேளை, கன்னிப்பெண்கள் ஒருவரை யொருவர் கதவைத்தட்டியெழுப்பினர் நிமல பொய்கையில் நீராடினர். செம்மைக் கோலத்துடன் இறைவழிபாடுசெய்தனர். இதனைக்கண்ட மணிவாசகருக்கு, இச்சம்பவம் ஐந்தொழில் நிகழ்வு பராசத்தியிலிருந்தெழும் அபரசக்திகளின் அருள் செயலை நினைவூட்டியது. அதன் விளைவுதான் திருவெம்பாவைப் பதிகம். இதன் தத்துவம் அமைதியொடு ஆய்தற்குரியது.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளே
  பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீர்அடியோம்
  உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார், அவர்உகந்து
  சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
  என்னகுறையும் இலோம் எமக்கேலோர் எம்பாவாய்!

*[இஃது திருவெம்பாவை ஒன்பதாம் பாட்டு. எட்டுப் பாடல்களில் சத்திகள் ஒருவரை யொருவர் எழுப்பும் செய்தியைக் கூறியபின், இதில் நவசத்திகள் ஒருங்கு சேர்ந்து பரமனைப்பாடும் விதத்தை விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர்.]*

# ரமண சங்க மணிகளுக்கு ஓர் விண்ணப்பம்

[யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்]

---

## ப்ரஹ்மானுபூதிச் செல்வர்களே!

ஒரு சூரியன் நம்முன்னுள்ளது. அதினின்று கோடிக் கதிர்கள் பரவுகின்றன, ஒவ்வொரு கதிரும் அவனுடையசித்ப்ரகாசமே. அதுபோல நமது அன்புக்கதிர்கள் எந்த ஆத்மசூரியனிடமிருந்து விரிந்தனவோ அதில் ஒருங்கே கலந்திருப்போம். ஆறுகள் ஆயிரமிடங்களிற் பிறக்கும்; ஆயிரக்கணக்கான ஊர்களை ஊட்டி எத்தனையோ பாறைகளிலும் பள்ளத் தாக்குகளிலும் விழுந்தெழுந்து புரண்டு முடிவில் ஒரு கடலையடையும். எத்தனை கோணல்களாக வளைந்து எங்கெங்கு திரிந்தாலும் முடிவில் ஆற்றின் அமைதி கடலே; ஆறுகள் தேடுவது கடலை. அதுபோல் அகண்ட சச்சிதானந்தக்கடலில் ஊர், பேர், உறவு, சுற்றம், இசை, வசை, பெருமை, சிறுமை முதலிய முக்குண தொந்த விகாரங்களின்றிக் கலந்திருப்போம். இரவிக் கதிர்கள் உலகிலுள்ள பலநீர்த்தடங்களினின்று ஆவியிழுத்து மேகப் படலங்களை நெய்கின்றன. மேகமானபிறகு, நான் வங்காளக்குடாக் கடல் ஆவி, நான் அராபிக்கடல் ஆவி, நான் அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஆவி, நான் கங்கையின் ஆவி, நீ கேவலம் உப்புக்கிணற்றின் ஆவி, நான் படித்தவன் வீட்டு அண்டாத் தண்ணீரில் உறிஞ்சப்பட்ட ஆவி, நீ நீசன் வீட்டுச் சாக்கடை நீரில் எழுந்த ஆவி, என்று வேற்றுமை பாராட்ட முடியுமோ? எங்கிருந்து எத்துணை ஆவிஇழுக்கப்பட்டாலும் எல்லாம் ஒரேமேகப்படலமாகின்றன. ஒரு குளிர்காற்றுப்பட்டவுடன், 'நீ முந்தி, நான்முந்தி' எனுமல் எல்லாம் சூல் மேகத்தில்நிரம்பிய வருணக்குழந்தைகள் இயல்பாக, ஒற்றுமையுடன், சங்கிலிக் கோர்வையாக உலகிற்கு இறங்கிவந்து உலகைப் பொன்னும் பச்சையும் நிலவச் செய்கின்றன. அதுபோலவே, அன்பர்காள்! நாமெல்லாம் எவரெவர் எங்கிருந்துறினும் எத்தகையராயினும் பெயர்வடிவு வேற்றுமைகளையெல்லாம் விட்டுப் பெயர்வடிவற்ற ஒருஅருள்மேகத்திற்கலந்து தென்றற்கரத்தால் ஞானபூமிநம்



செல்வமாக அழைக்கும்போது, அவள் உள்ளங்குளிர ஞானக் கிண்கிணி சலசலென, நாம் செல்லும் வழியெலாம் ஆத்மஞான முத்துக்களும் பேரின்பப் பொன்னும் பசுமையும் குலுங்க ஜீவன்முக்தக் குழந்தைகளாக விளையாடுவோம். அவ்விளையாட்டில் அனைவரும் ஒன்றே. சாதி, நிறம், பிறப்பு, படிப்பு முதலிய புற வேறுபாடுகளின்றி, உள்ளொற்றுமையால், அகண்டபரி பூரணானந்தத்தைக் கலந்து விளையாடுவோம்.

## அன்பர்களே. ரமண சங்க மணிகளே!

நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவோ பெருமை வாய்ந்தவர்கள், ஒவ்வொருவர் தனிச் சரிதையும் மகா பாரதம்போல் விரிந்து எத்தனையோ, சுகதுக்க, பந்த தொந்த இன்ப துன்பப் படலங்களைக் கொண்டிருக்கலாம். அவரவர்கட்கு அவரவர் மனசாட்சியே எழுதுகோல்; ஒவ்வொருவர் சித்தத்திலும் ஒரு சித்ரகுப்தன் உறக்கமற்று அவரவர் நினைப்பு, நடப்பு, சிறப்பு, வளப்பங்களைச் சுருள்சுருளாக எழுதிவைத்துள்ளார். அவரவர் வாழ்வுச் சுருளை அவரவரே அவிழ்த்துப் பார்க்கட்டும். பெரிய கவிகள். புலவர்மணிகள், அறிவுச் சுடர்கள், சிவப்பழங்கள், கல்விக்கடல்கள், செல்வச் சுரங்கங்கள். வைராக்கியக் குன்றுகள், அருட்பணிவீரர், பொதுப்பணி நல்லோர் எத்தனையோ சேர்ந்து **ரமண சங்கமாக** இன்று விரிந்துள்ளது. ரமண கற்பகம் எத்தனையோ கிளை பரவி விரிந்து ஞானக்கனி குலுங்குகின்றது. அதில் எத்தனையோ கிளிகளும், குயில்களும், கருடன்களும் சிட்டுக்குருவிகளும், கனியுண்டு கூடுகட்டி வாழுகின்றன. அவை எங்கிருந்து எப்படி வந்தன என்று வினவவேண்டாம். அவை இக்கற்பகத்தில் எப்படி வாழுகின்றனவென்றே காண்போம். நாமரூப பேதங்களெல்லாம் "நாம் + அரூபம்" என்ற ஞானத்தில் கரைந்து அந்த ஞானக் கதிரவனான திருவருட் பெருமானின் அருட்கிரணங்களாக உள்ளும் புறமும் ஒளிவளர்வோம். இச்சிறு தோல்வேற்றுமைகளை மறந்து, ஆன்மக் கடவுளின் சுத்த சுதந்தர சமத்துவ விதானத்தில் சத்தாகிய உண்மையை உடலாகவும், சித்தான அறிவை ஆற்றலாகவும், உட்புறக்களிப்பையே சிறகுகளாகவும் கொண்டு சொரூபத்யான மென்னும் காற்றையுறுஞ்சி அருட்கனியுண்டு உலாவுவோம்.

பல அன்பர்கள் கூடிப் பெருமைப் படுத்துவது ஒரு பகவானையே, அவன் அருள் விரிவே அனைத்தும். அவனுடலே அன்பர். அவன் கழலடைந்த பிறகு அவர்கள் புதுப்பிறப்பெடுக்கின்றார்கள். அப்பிறப்பிற்கு பெயர் வடிவுசாதிமத பேதமில்லை. அது ஆனந்தப் பிறவி. மனவிகாரமற்ற இதயவெளியில் அப்பிறவி இன்ப ஊற்று, ஆத்மானந்தம் பொங்குகிறது. அவ்வூற்றைக் கண்டு தாகந் தணிவோம். கண்ணாடிவீட்டிற் குடிபுகுந்த நாய்போல மனமாயை ஆன்மாவின் நிழலான இவ்வுலகத் தோற்றங்களைக் கண்டு வேறுபாட்டால் அஞ்சிச் சினந்து வெறித்து, குரைத்து வாழ்வைத்தற்கொலை புரிகிறது. இம்மன மாயை யொழிந்து தானே அனைத்தும். அனைத்தும் தன்னில் என்ற காட்சிப் பெருமானின் கழலிணையடைந்தஅன்பறிவுக் கனிகாள், நமது பெருமையெல்லாம் தத்வனத்தில் விளங்கும் இந்த ஜோதி கற்பகத்திற்காகுக. அனைவரும் அவனுட் கரைவோம், அறிவு, கல்வி, கவி பேச்சு, எழுத்து, பலவகைப் பணிகள். தவம், அன்பு, எல்லாம்அவனுக்கேநிவேதனமாகி அவன் பெருமை உலகில் விளங்கட்டும் அவன்பால் அவனுட் கலந்தோம், அவன் பெருமை நமது பெருமை. ஒரு பூர்ணாவதாரச் சந்திரனுடன் எத்தனையோ உடுக்கணங்கள் வைரமணிகள் போன்று அன்பு விண்ணிற் பரவியொளிர்கின்றன. எல்லாவிண்மீன்களும் தமது தனித்தனிப்பெருமை எல்லையற்ற தேனும், தமதுஅன்புவிண்ணில் அமுதப் புன்னகை புரியும் ஒருஅறிவுத் திங்களுக்கே அணியாகுக! அவனைநமது ஆர்வத்தால் இவ்வாறு வணங்கி நமது அன்பு மலர்களால் வழிபடுவோம்

பகவான் ரமணமஹரிஷிகளின் ஜென்மநட்சத்திரம் 22-12-53 பொருந்துகின்றது. அன்று கொள்ளுப்பிட்டியிலும், 24-12-53ல் நாவலப்பிட்டியிலும். 25-12-53ல் வதுளையிலும் அவரது ஜயந்தி விழா கொண்டாடப்படும்.

---



### சகோதரி நிவேதிதா வரைந்த

# 'என் ஐயனை யான் கண்டவாறு'

### என்னும் ஆங்கில நூலிலிருந்து

### ஒரு பக்கம்.

"இந்த ஆறுவார சமுத்திர யாத்திரையால் எனது ஜன்மம் சபலமாயிற்று; பிறவிப்பெரும்பயன் கை கூடிற்று ஒரு நிமிஷங்கூட விடாமல் சுவாமிகளுடன் சம்பாஷிக்கச் சமயம் வாய்த்த போதெல்லாம் நான் அவருடைய உபதேச அமுதத்தைப் பருகினேன்; மற்ற நேரங்களில் ஏதாவது எழுதுவதும் பின்னல் வேலை செய்வதுமாக விருந்தேன். இப்படித் தொடர்ச்சியாக அவரது திவ்யபரவித்யானுபவங்களைப் பெறும் பாக்கியம் எனக்குக்கிடைத்தது. அதற்கு எளியேன் யான் எங்ஙனம் கைமாறு புரியவல்லேன்!"

யாத்திரையின் ஆரம்பம் முதல் முடிவுவரை, சமயதத்துவ சாரமான அபூர்வ கதைகளை அவர் அருளிச்செய்தார். எந்த சமயத்தில் எதைப்பற்றி அருள்வாக்கு உதிக்குமோவென்று நான் அவருடைய வாயசையும் தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருப்பேன். சிவாத்ரி மகாத்மியம், பிருதிவிராஜ், விக்கிரமாதித்ய மன்னர்கள் நீதிபரிபாலன சிம்மாசனம், புத்தபகவான், யசோதரை சரித்திரம் முதலிய அரிய விஷயங்களை சுவாமிகள் ஆச்சரியகரமாக உணர்த்துவார் இவற்றுள் அவர் எதையும் இரண்டாம்முறை அருளினாரென்பதே கிடையாது. இந்தியாவின் ஜாதி வித்தியாசத்தைப் பற்றியும் அதனால் ஏற்படும் மன வேறுபாட்டிற்கேற்ற காரணங்களையும் அவற்றை நிவர்த்திக்கும் மார்க்கங்களையும் அவர் தெற்றென விளக்கினார்".

"இடையிடையே, அவர்சமய உணர்ச்சியைப் பற்றிப்பேசினார், நாயகா நாயகி பாவத்திலும் தாசானுதாஸ சக்யத்திலுமே பல சமயங்களின் கொள்கைகள் வேரூன்றியுள்ளன. இது இந்தியாவில் வைஷ்ணவ மதமென்றும், மேல் நாடுகளில் கிறிஸ்தவ மதமென்றும் பெயர்பெறும். எப்படிச்சிலர் காளியைப் பூஜிக்கத்து

ணிந்தார்கள்? நாமும்அப்படியே தேவியைப் பூஜிப்போமே! நாம் பயங்கரத்தை, அது பயங்கரமாயிருப்பதால் அப்பயங்கரம் நீங்கவாழ்த்துவோமே. துக்க நிவாரணத்திற்காக நாம் துக்கத்தையே வழிபடுவோமே?" என்று ஓர் பேருண்மையை வெளியிட்டருளினார். ஒரு நதி சமுத்திரதில் கலக்கின்ற முகத்துவாரத்திற்கு நேராகக் கப்பல் வந்ததும், சர்வேஸ்வரனுடைய மகத்தான கருணைக்கு ஈடாயுள்ள சமுத்திரத்தைத் தாண்டக்கூடாதென்று, பக்தியினால் எப்படி ஹிந்துக்கள் ஓர் நியமத்தை அனுஷ்டிக்கிறார்களென்பதையும், பல நூற்றாண்டுகளாக அனுஷ்டானத்திலிருந்து வரும் அதைத் தாம் கடந்ததன் நோக்கமென்ன வென்பதையும் எனக்குச் சாங்கோ பாங்கமாகக் கூறினார். அப்பால், அதை விட்டகன்று செல்லும்போது சுவாமிகள் "நமசிவாய! நமசிவாய" வென்று ஸ்மரித்தார். பின்னும் அவர் யாத்திரைக்காலம் முழுவதும் வெகு அமைதியாக வினாக்களுக்கு விடையளிப்பதும், சரித்திரம், இலக்கியம், காவ்யம் முதலியவற்றின் சாரமான பாகங்களை எடுத்தோதுவதுமாக என்னறிவை வளர்த்து வந்தார். சுவாமிகள் திரும்பத் திரும்ப பௌத்தர்காலத்தை இந்தியச் சரித்திரத்தின் சிறந்த பாகமென்று கூறிவிளக்குவதுண்டு. 'பௌத்த மதத்தின் மூன்று சுழல்களில், ஐந்நூறு வருடங்கள் கொள்கை நிருபணமும், ஐந்நூறு ஆண்டுகள் விக்ரஹபிரதிஷ்டாயனமும், ஐந்நூறு சம்வத்ஸரங்கள் தந்த்ர காலமுமாக விருந்தன. ஆனால், பௌத்த தர்மமென்று எந்தமதமும் அதன் சொந்த தேவாலயங்கள், குருமார்கள் முதலிய லக்ஷணங்களுடன் எந்த காலத்திலாவதுஇருந்ததென்று நினைக்கிறாயோ? இல்லவேயில்லை, அது எப்பொழுதும் ஹிந்து மதத்தில் ஆழ்ந்து இரண்டறக் கலந்திருந்தது. ஒரே தடவை புத்தருடைய அவதார பிரவர்த்தகத்தின் ஆதிக்யம் மட்டும் சிறிது விமரிசையாகவிருந்தது, அதன்பயனாக இந்தியாவின் சாதுக்களின் தொகை பெருகிற்று!' என்று ஒருதரம் பேசினார்."

"ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமிகள் சாதாரணமாக ஹர்ஷானென்னும் முகலாயச்சக்கரவர்த்தியைப் பற்றிப்பேசிக்கொண்டேவந்து, கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து, பின்னர், சரேலென்று "சரி... புத்தபகவான் கூறியது சரிதான்! அது கர்ம வினையின் காரணமும் பயனுமாய்த்தான் இருக்கவேண்டும். இந்தவியக்தித்துவம் மாயையாகவே இருக்கவேண்டும்" என்றியம்பினார். அந்த அருட் பிழம்பின் அமுத வசனங்களை நான் என்னென்று போற்றுவேன்!"

*[மேலே குறித்த ஆறுவாரம் 20-6-1899 சுவாமி விவேகானந்தர் கல்கத்தாவில் கப்பலேறி 31-7-99 லண்டன் நகரைச் சேரும்வரைக்கும் உள்ள காலமாகும். 27-6-99 சுவாமிக்கு சேர். குமாரசுவாமி, திரு. பொன். அருணாசலம் இருவரின்முயற்சியால் அளிக்கப்பட்ட வரவேற்பு கொழும்பில் நடந்த இரண்டாவது வரவேற்பாகும்]*



# நச்சிகேதனின் மூன்று குணங்களும் அவன்கேட்ட மூன்று வரங்களும்.

[சுவாமி சித்பவானந்தர்]

நச்சிகேதன் என்னும் ரிஷிபுத்திரன் ஒருவன் இருந்தான். அவனுடைய பாங்கு பண்புடைய கல்விக்கு இலக்காகிறது. கௌதமர் என்ற ரிஷிக்கு அவன் மைந்தன். அப் பெரியவர் விச்வஜித் என்ற வேள்வியைத் துவக்கினார், அதைத் திட்டமாகச் செய்து முடிக்கிறவர்க்கு உலகனைத்தும் சொந்தமாகிறது. ஆனால், கௌதமரிஷிமுதல் நிபந்தனையையே நிறைவேற்றவில்லை. விச்வஜித் யாகம் செய்பவன் தன்னிடத்துள்ள பொருட்களையெல்லாம் உலகுக்கு நன்குபயன்படுபவைகளாகச்செய்துவிடவேண்டும். அதைக்குறித்து மனத்தில்கிலேசமோ தங்குதடையோ ஒன்றுமிருக்கலாகாது. கௌதமருக்கோ அப்படி மனம்வரவில்லை. தமக்குதவாத பொருட்களை மட்டும் தாராளமாகப் பிறர்க்கெடுத்து வழங்கினார். பசு வகைகளுள் மலடும், மேலும் ஈனாததும், வீணே தீனி தின்று நீர் குடித்திருந்தவைகளும் அவர் உலகுக்கு வழங்கினபொருள்களாயின.

ஒவ்வாத அச்செயலைக்கண்ட மைந்தன் நச்சிகேதனுக்கு மனத்தகத்து எழுச்சி உண்டாயிற்று. "தந்தை செய்வது தகாத செயல்; இதனால் அவருக்கு இம்மையுமில்லை; மறுமையுமில்லை. இதற்கு ஈடு கொடுப்பது என் கடமை, அவருக்கு நான் தலைமை மாணாக்கன் அல்லேன் எனினும், கடைமாணாக்கன் ஆகேன்." இங்ஙனம் தனக்குள் பணிவுடனும் உறுதியாகவும் எண்ணிக் கொண்டான். "அப்பா, என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கிறீர்கள்? என்று சபைநடுவே அவன் கேட்டான். கௌதமர் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இரண்டாந்தடவை வந்த அதே கேள்வியை அவர் வேண்டுமென்றே ஏதோ ஓலமிட்டு மறைத்துவிட்டார். மூன்றாந்தடவை வந்தவிண்ணப்பத்தை புறக்கணிக்க பிதாவுக்கு முடியாமற்போயிற்று. "நச்சிகேதா! உன்னை நமனுக்குப்பிடித்துக் கொடுக்கிறேன்" என்று சினந்து அரற்றினார் தந்தை. "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை. அவர் மொழி பொய்யா மொழியாக வேண்டும்," என்று இயம்பிவிட்டு மைந்தன் மறலியின் இருப்பிடத்துக்குப்போ

னான். ஆனால், அப்பொழுது யமன் வீட்டிலில்லை. ஊண், உறக்கமின்றி நச்சிகேதன் மூன்றுநாள் காத்திருந்தான். திரும்பி வந்ததும் தர்மராஜன் தனது பராமுகத்துக்குப் பரிகாரமாக மூன்று வரங்களை ஏற்றுக்கொள்ளும்படி குணவானாகிய அவ்விளைஞனிடம் வேண்டினான். ரிஷிபுத்திரனும் அதற்கிணங்கி மூன்று வரங்கள் கேட்டான் தன் தந்தை கௌதமர் அமைதியுற்றிருந்து தன்னைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது முதல்வரம். மனிதன் என்ன செய்தால் பெறவேண்டியதையெல்லாம் பெற வல்லவனாகின்றான் என்றறிவது இரண்டாவது வரம். மரணத்துக்கு அப்பால் உள்ளது யாது என்றுதெரிவது மூன்றாவது வரம். நச்சிகேதனுடையபண்பனைத்தும் இவ்வரலாற்றில் வெளியாகிறது. இளைஞன் ஒருவன் எவ்வகையில் பயிற்சிபெற்றிருக்க வேண்டும் என்பதற்கு இது யாண்டும் எடுத்துக்காட்டாகும்.

ஒழுக்கமில்லாதவன் சுயநலத்திலே கண்ணுங் கருத்துமாயிருப்பான். தனக்கு இன்பந் தருபவைகளாகத் தென்படுபவைகளையெல்லாம் அவன் தன்னுடையதாக்க முயலுவான். உலகில் மற்ற உயிர்கள் இருப்பது தன்பொருட்டு என்பது அவன் கருத்து. ஒழுக்கமுடையவனது எண்ணம் அதற்கு நேர்மாறானது. தன்னிடத்திருக்கும் நலத்தை அவன் பிறர்க்கென்று வைத்திருக்கிறான். பிறர் நலத்தில் வைத்துள்ள எண்ணம் தன்னலத்தை மறக்கும்படி செய்துவிடுகிறது. நல்லொழுக்கத்திற்குச் சான்று நச்சிகேதன். அவன் அடக்கமே வடிவெடுத்தவன். அத்துடன் பணிவு அவனுக்கு ஆபரணமாக வந்தமைகிறது. கீழ்ப்படிதல் அவனிடத்து அமைந்துள்ள இரண்டாவது சிறப்பு ஆகிறது. தனது தந்தையின் நன்மைக்கென்றே நச்சிகேதன் கீழ்ப்படிந்து யமன் வாயிலுக்குப் போகிறான். அதன்மூலம் அறம் காக்கப்படுகிறது. அதே வேளையில் தந்தையின் ஆணைக்குத் தகைமை தந்த மைந்தன் அவன்.

மூன்றாவதுசிறப்பியல்பாகிய ஊக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவன் நச்சிகேதன். அவனது செயல் ஒவ்வொன்றும் சிரத்தையினின்றும் உதிப்பதாகும். தலை மாணாக்கனென்று தன்னைப் பெருமிதப்படுத்தாத பாங்கானது அவன் கொண்டிருந்த ஊக்கத்தின் விளைவாம். தன்னைப் பெருமிதப்படுத்துபவனுக்கு மேலும் மனவளர்



ச்சியுண்டாவதில்லை. எவ்வளவு மாண்புடையவனாயிருந்தாலும், தான் மேலும் அடையவேண்டிய மாண்பு மலையிலும் மிகப்பெரிது என்ற மேல் நோக்கங் கொண்டிருப்பவனே சிரத்தையுடையவனாகிறான். அது நச்சிகேதனது சிறப்பு. தந்தைக்குத் தான் ஆற்றுங் கடமையில் அவனுக்குத் தளர்வு உண்டாகவில்லை. மண்ணுலகில் அக்கடமையை அவன் முறையாகச்செய்து முடிக்கிறான். விண்ணுலகு என்ற யமலோகத்துக்கு அவன் மகிழ்ச்சியுடன் சென்றதும் தந்தையின் பொருட்டேயாம். அங்கேயும் தான் பெற்ற முதல் வரத்தைத் தந்தைக்கென்றே பயன்படுத்திக்கொள்கிறான். பெற்றோர்க்குத் தன் கடமையைச் செய்வதில் அங்ஙனம் அவன் ஊக்கமே வடிவெடுத்தவன்.

உலக மக்களது நன்மையை நச்சிகேதன் மறந்து விடவில்லை. அவர் முன்னேற்றத்திலும் அவன் ஊக்கங்கொண்டிருந்தான். அவன் கேட்ட இரண்டாவது வரம் அதற்குச் சான்றாகிறது. விரும்பியதையெல்லாம் விரும்பியபடி அடைவதற்கு மனிதன் என்ன செய்யவேண்டும் என்பது அவன் கேட்ட இரண்டாவது வரம். பண்பாடும் முறையான முயற்சியும் ஒன்றுசேர்ந்து மனிதனுக்கு வேண்டியதையெல்லாம் வழங்கும் என்ற விடை வந்தது. மனிதன் தன்னை எதற்குத் தகுதியுடையவனாக்குகிறானோ அது அவனை விட்டுப் போகாது. ஒருவன் பக்குவமடையுமளவு தகுதிதானே வந்தமைகிறது. தகுதியுடையவனுக்கு விரும்பியதெல்லாம் விரைவில் வந்தமைகிறது. இவ்வுண்மையை அறிந்து முயலுவார் எவ்வுலகில் எதை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்.

நச்சிகேதன் கேட்ட மூன்றாவது வரம் மரணத்துக்கு அப்பால் உள்ளது யாது என்பதைப்பற்றியது அதன்மூலம் மனிதனது அழியாப் பொருளை அவன் அறிபவன் ஆகிறான். இகபரம் இரண்டும் மனிதனுக்குச் சொந்தம். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்திருப்பது பண்பட்டாரது செயலன்று. இருமையும் பெறவேண்டிய பாங்கு மனிதனிடத்து இருக்கவேண்டும். இங்ஙனம் மூன்று வரத்துக்குள் வாழ்க்கை சம்பந்தமான அனைத்தையும் நச்சிகேதன் அடக்கிவிடுகிறான். மேலும் பெறவேண்டியது மனிதனுக்கொன்றுமில்லை. செய்யவேண்டிய கடமைகளிலும் அவனுக்குப் பாக்கியொன்றுமில்லை. ஊக்கமுடைய ஒருவனுக்கு எதெல்லாம் சாத்தியமாகிறது என்பதை அவன் காட்டுகிறான்.

———

## சன்மார்க்க வாசிகசாலை.

—(—)—

வள்ளுவம்:- வள்ளுவர் கருத்துக்களை உலகிற்கு வழங்கினுர் பலர். இந்நூலாசிரியர் திருவள்ளுவரை முன்வைத்துப்பேசினுற்போல பன்னிரண்டு சொற்பொழிவுகளைக் கொண்டதாய்இந்நூலை அமைத்துள்ளார். வள்ளுவ நூலின் நடை கற்பவரை நிறுத்திக்கற்கச் செய்யும்; வேகப் படிப்பைக்குறைத்து விளங்கிப்படிக்கத் தூண்டும்; சொல்தோறும் ஒன்றிநின்று மனம் வைத்து அறிவு செலுத்தி உண்மைகாணச் சொல்லும் வள்ளுவம் தொகுப்பு நூலன்று; முதற்கண் முழுதும் வரையறுத்துக் கொண்டு முரணறுத்து எழுதியமுறைநூல். யாவரும்படித்துப் பயனடையவேண்டிய நூல்.

ஆக்கியோன்:- வித்துவான் வ. சு. ப. மாணிக்கம் M. A. M. O. L.

விலை ரூபா ஐந்து.

நூல்கிடைக்குமிடம்:- பாரி நிலையம்

59, பிராடுவே, சென்னை 1. தென் இந்தியா.

---

### திரு. வி. க. அவர்களின் ஞாபகார்த்த
## மண்டபநிதி நன்கொடையாளர்கள்.

| | | | ரூ. ச, |
|---|---|---|---|
| | ஐப்பசி மாதச் சுடரில் வெளிவந்த தொகை | | 110-00 |
| திரு | ராம. லெட்சுமணன் | கண்டி | 5-00 |
| ,, | பெரி சுப்ரமண்யம் | ,, | 5-00 |
| ,, | சிவ. கண. இராமநாதன்செட்டியார் | , | 2-00 |
| ,, | பெரி. சுப்பிரமணியன் | ,, | 2-00 |
| ,, | சி. த. கணேசன் | ,, | 1-00 |
| ,. | திரு வி. க. அன்பர் | ,, | 1-00 |
| ,, | மு. ஞானபண்டிதன் செட்டியார் | ,, | 1-00 |
| ,, | ப. ராம. சுப. | ,, | 1-00 |
| ,, | கதி. முத்தையா | ,, | 1-00 |
| ,, | வெ. ராம. | ,, | 1-00 |
| ,. | நா. அண. நாராயணன் செட்டியார் | ,, | 1-00 |
| ,, | பாலகிருஷ்ணன் ஸ்ரோர்ஸ் | ,, | 1-00 |
| | | | 132-00 |

# செய்தித்திரட்டு.

ரமணஜெயந்தி:-

24-12-53. வியாழக்கிழமை பி. ப. 6-30. மணிக்கு கினிசுத்தனையைச் சேர்ந்த கடவளைத் தோட்டத்தில் நடைபெறும்.

25-12-53. வெள்ளிக்கிழமை பி ப. 6-30 மணிக்கு பதுளைச் சைவபரிபாலனசபை ஆதரவில் பதுளைச்சரஸ்வதிவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சாரதாதேவியாரின் நூற்றாண்டு விழா:-

26-12-53 சனிக்கிழமை பி ப 5 மணிக்கு பதுளைச்சைவபரிபாலனசபை ஆதரவில் பதுளைச் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்

27-12-53 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நனுஓயா காந்தி ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்

28-12-53. திங்கட்கிழமை பிற்பகல் 6-30 மணிக்கு நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தில் நடைபெறும்.

நனுஓயாவில் காந்திஞாபகார்த்த மண்டபத்திறப்பு விழா 27-12-53. ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

---

| | | | |
|---|---|---|---|
| | முற்பக்கம் | | 132-00 |
| ,, | ஸ்ரீ முத்துலட்சுமி ஸ்ரோர்ஸ் | ,, | 1-00 |
| ,, | அசோக ஹோட்டல் | ,, | 1-00 |
| ,, | குமரப்பன் | ,, | 1-00 |
| ,, | எஸ் என் எஸ். முத்தையா | ,, | 2-00 |
| ,, | பெரி. று. நாகப்பா அன் கோ., | ,, | 1-00 |
| ,, | எஸ்-பி-அருணசலம் | ,, | 1-00 |
| | ஒரு அன்பர் | ,, | 1-00 |
| ,, | அரு பழனியப்பன் | ,, | 1-00 |
| | ஒரு அன்பர் | | 1-00 |
| | ஆகமொத்தம் | | 142-00 |

Regd, at the G-P-O as a News Paper H-C 59-300


# விளம்பரம்

## சரித்திர கதா வாசகம்.

### 5-ம் வகுப்பு

(இலங்கைச் சரித்திரமும் உலகசரித்திரமும் கி-பி 1500 வரை)

[ஆக்கியோன் இ. தர்மலிங்கம்]

இப்புத்தகம் புதுமுறையான பல அப்பியாசங்களுடனும் கண்கவர் வர்ணப்படங்களுடனும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலைப்பற்றி முன்னுள் யாழ்ப்பாணம் சைவ ஆசிரிய கலாசாலை அதிபராகவிருந்த

திரு. சி. சுவாமிநாதன் B A, அவர்கள் கூறியது

"இம்மாதிரியான மாணவருக்கேற்ற ஓர் நூலை யான் தமிழில் படித்ததில்லை... தொடர்புகெடாது பாடத் திட்டத்தை ஒட்டி இன்பம் பயக்கும் முறையில் இந்நூல் எழுதப்பட்டிருப்பதை முதற்கண் கவனிக்கலாம்."

புத்தக வியாபாரிகளுக்கு விசேடசழிவு கொடுக்கப்படும்.

பிரதி விலை ரூபா 1 சதம் 75

விலாசம்

V. MAILVAGANAM,
247/7, HULTSDORF STREET
COLOMBO 12.

ஆயுள் சந்தா ஆதரவாளர்கள்.

திரு க. வடிவேற்சுவாமிகள் திருநெறிக்கழகம் கிளிநொச்சி

" A. சின்னையா A, D, K. சாவகச்சேரி


சரவண அச்சகம்—நாவலப்பிட்டி